DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 19/2020**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காமராஜ் | Caste | : | |
| Father Name | : | கோபால் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.03.2026.**

**PW - 25**

**(1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திருச்சி மாவட்டம், ராம்ஜி நகர் எல்லைக்குட்பட்ட ரோந்து எண்.2 ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 25.05.2019 அன்று உப்பிலியபுரம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது 15.00 மணியளவில் உப்பிலியபுரம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் உத்தரவின்பேரில் உப்பிலியபுரம் காவல்நிலைய குற்ற எண்.121/2019 இதச பிரிவுகள் 147, 294 (b), 323 மற்றும் 302 ன் கீழான வழக்கில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை, அசல் புகாருடன் துரித தபால் மூலம் நீதித்துறை நடுவர், துறையூர் அவர்களிடம் ஒப்படைத்து, மற்ற நகல்களை உரிய உயர் அதிகாரிகளிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை

செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1, 3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையை ஒப்படைத்தபிறகு மறுநாள் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். மறுநாள் என்னை ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை. 10.07.2019 அன்றுதான் என்னை ஆய்வாளர் விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சமயத்தில் நான் நிலையத்தில்தான் இருந்தேன். முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் என்னிடம் 25.05.2019 அன்று 15.00 மணிக்கு ஒப்படைத்தார். உப்பிலியபுரம் காவல்நிலையத்திற்கும், நீதித்துறை நடுவர் துறையூர் நீதிமன்றத்திற்கும் சுமார் 20 கிலோமீட்டர் தூரமிருக்கும். பேருந்தில் வந்தால் மேற்படி காவல்நிலையத்திலிருந்து துறையூர் நீதிமன்றத்திற்கு 45 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் அந்த தபாலை கொடுக்கும்போது அது துரித தபால் என்று சொன்னார். அவ்வாறு துரித தபாலை பெற்றால் உடனடியாக நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற விபரம் நன்றாக தெரியும். என்னால் மதியம் 03.00 மணிக்கு ஒப்படைத்ததாக சொல்லும் துரித தபால் அன்று இரவு 11.55 மணிக்கு நீதித்துறை நடுவரால் பெறப்பட்டதாக அவரால் குறிப்பு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணத்தை நான் ஆய்வாளர் விசாரித்தபோது சொன்னேன். அந்த காரணத்தை புலன்விசாரணை அதிகாரி பதிவு செய்தாரா என்றால் அதை அவரிடம்தான் கேட்கவேண்டும். நான் சொன்ன அந்த காரணம் என்னவென்றால், நான் உடனடியாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்றுவிட்டேன், நடுவர் வெளியில் சென்றிருந்தார். நான் வளாகத்திலேயே காத்திருந்து அவரிடம் ஒப்படைத்தேன். நான் நீதித்துறை நடுவர் வளாகத்திற்கு சென்றபோது என்ன நேரம் என்றால் 16.00 மணியாகும். அதன்பிறகு இரவு 11.55 மணிக்கு மேற்படி தபாலை எங்கு வைத்து நடுவரிடம் கொடுத்தேன் என்றால்

நீதிமன்ற வளாகத்தில் உள்ள முகாம் அலுவலகத்தில் கொடுத்தேன். நான் அன்று மாலை 16.00 மணியிலிருந்து நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்ததாக ஆய்வாளரிடம் தனியாக அறிக்கை செய்தேனா என்றால் இல்லை. எனது வாக்குமூலத்தில் எனது பெயர் காமராஜன் என்று எழுதப்பட்டிருந்தால் அது தவறு. நான் சொன்னதுபோல் அன்று மதியம் 15.00 மணிக்கு என்னிடம் தபால் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், நான் 16.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்ற வளாகத்திலேயே காத்திருந்து ஒப்படைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிரி தரப்பில் இதே குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.